செ.வெ.எண்: 27/ஆகஸ்ட்                                                                                    நாள்: 15.08.2017

**இராமநாதபுரம் மாவட்டம்**

# சுதந்திர தினத்தை முன்னிட்டு இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம், வன்னிவயல் கிராமத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில்

# மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்றார்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம், சித்தூர் ஊராட்சி, வன்னிவயல் கிராமத்தில் இன்று (15.08.2017) சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்றார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:

அண்ணியர் ஆதிக்காதிலிருந்த நம்நாடு விடுதலை பெறுவதற்காக நமது தேசத்தின் விடுதலை இயக்க தலைவர்கள் 1942-ல் வெள்ளையனே வெளியேறு என்ற மாபெரும் இயக்கத்தை முன்னின்று நடத்தியதால் நம் இந்திய திருநாடு 1947-ல் விடுதலை பெற்றது. இதற்காக பலர் தங்கள் உயிரை தியாகங்கள் செய்துள்ளனர்.எனவே, இந்த சுதந்திர தினவிழா நன்னாளில், வெள்ளையனே வெளியேறு என்ற மாபெரும் இயக்கம் துவங்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைகிறது. இந்த இனிய வேலையில் அதனை போற்றி கொண்டாடவேண்டியதும், இந்திய விடுதலைக்காக உயிர் தியாகங்கள் செய்துள்ளவர்களை நினைவு கூர்வதும் நம் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.

இக்கிராம சபை கூட்டத்தில் கிராம ஊராட்சி வளர்ச்சி திட்ட அறிக்கை, கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் அதன் செலவினம், அந்தியோதயா இயக்கம், டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சிகளை பிரகடனம் செய்தல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் செயலாக்கம், திடக்கழிவு மேலாண்மை திட்டம், நியாயவிலை கடைகள் செயல்பாடு குறித்த சமூக தணிக்கை, கிராம ஊராட்சிகளில் வரும் காலங்களில் பேரிடர் அபாய குறைப்பு பணிகள் முன்னுரிமை, குடிநீரை சிக்கனமாக பயன்படுத்துதல் பிளாஸ்டிக் பயன்பாட்டை தடை செய்தல் குறித்து திட்டமிடுதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளன.அந்தவகையில் ஊரக பகுதிகளில் உள்ள பொது மக்கள் அரசு செயல்படுத்தி வரும் அனைத்து மக்கள் நலத்திட்டங்கள் குறித்து முழுமையான விழிப்புணர்வு பெற்று, அவற்றை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்

முன்னதாக, இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், “2022-க்குள் புதிய இந்தியாவை படைப்பதல்” குறித்த விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். மேலும் கிராம பொது மக்கள் பங்கேற்ற “திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற கிராமம்” குறித்த விழிப்புணர்வு பேரணியும் நடைபெற்றது.

அதன்பிறகு, இராமநாதபுரம் குண்டுகரை அருள்மிகு முருகன் திருக்கோவிலில் சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக நடைபெற்ற சமபந்தி விருந்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்றார்.

இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.ரா.பேபி, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.ஆ.செல்லத்துரை, வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.செல்லம்மாள், வட்டாட்சியர் திரு.சன்முக சுந்தரம் உட்பட அரசு அலுவலர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**